# ஆசிரியர்களின் பாடத்திட்டமிடலானது சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் அடைவு மட்டத்தில் ஏற்படுத்தும் தாக்கம்: மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்குட்பட்ட அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**Tharshana T.**[141]

**ஆய்வுச் சுருக்கம்**

ஆசிரியர்களின் பாடத்திட்டமிடலின்மைக்கும் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் அடைவு மட்டத்திற்கும் இடையிலான தொடர்பினை அறிதல் எனும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென்மேற்குக் கோட்டத்திலுள்ள அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் 04 நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் பாட அனுபவங்களை இனங்காணல், ஆசிரியர்களின் பாடத் திட்டமிடல்களை கண்டறிதல், மாணவர்களின் அடைவுமட்ட வீழ்ச்சிக்கான காரணங்களை பகுப்பாய்வு செய்தல், ஆசிரியர்கள் பாடத்திட்டமிடல்களை மேற்கொள்வதற்கான ஆலோசனை வழிகாட்டல்களை மேற்கொள்ளல் தொடர்பாக பெறப்பட்ட அளவு, பண்பு ரீதியான தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதோடு ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தை அதிகரிப்பதற்கான பயிற்சிகள் ஓரளவு இடம்பெறுகின்றது. ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டிய விடயங்களை ஒவ்வொரு நாளும் தயார்படுத்துவதில்லை. அதிபர்கள், ஆசிரியர்களை மேற்பார்வை செய்வது திருப்தி அளிக்கக் கூடிய வகையில் காணப்படவில்லை. ஆசிரியர்கள் பாடத்தை உரிய வேளையில் திட்டமிடாமைக்கான காரணங்களாக வீட்டிலிருந்து பாடசாலை அதிக தூரத்தில் காணப்படல், பாடசாலைக்கு நேரத்திற்கு செல்வதற்கான வாகன வசதிகள் இன்மை, பாடரீதியான நிபுணத்துவமின்மை, பாடசாலையில் வளங்கள் போதாமை, நவீன கற்பித்தல் துணைச் சாதனங்களை பயன்படுத்த தெரியாமை, வகுப்பறைச் சூழல் கற்பித்தலை மேற்கொள்வதற்கேற்ற வகையில் காணப்படாமை போன்ற முடிவுகள் பெறப்பட்டன. எனவே ஆசிரியர்களை நியமனம் செய்யும் போது குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நியமித்து வாண்மைத்துவ பயிற்சிகளை வழங்குதல் வேண்டும். பாடசாலையில் ஆசிரியர்கள் தேடலை மேற்கொள்ளக் கூடிய வகையில் இணைய வசதிகளை கல்வித் திணைக்களங்கள் பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்கள் பாடத் திட்டமிடலுடன் வகுப்பறைக்கு செல்ல வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்கள் தயாரிக்கும் செயற்பாட்டுத் திட்டங்களுக்கேற்ற வகையில் கற்பித்தலை மேற்கொள்கின்றனரா என்பதை அதிபர் மேற்பார்வை செய்ய வேண்டும். ஆசிரியர்களுக்கு நவீன கற்பித்தல் சாதனங்கள், கற்பித்தல் முறைகளை பயன்படுத்துவதற்கான செயலமர்வுகளை கல்வித் திணைக்களங்கள் மேற்கொள்ள வேண்டும். பாட ரீதியில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்களுக்கு அத்துறை சார்ந்த வளவாளர்களைக் கொண்டு கருத்தரங்குகளை நடத்துவதோடு கல்வியமைச்சு உள்வாரி, வெளிவாரியான பரிசோதனை வழிகாட்டல்களை பாடசாலை ரீதியாக நடாத்த வேண்டும். ஆசிரியர் குறிப்பிட்ட தவணைக்குரிய பாடத்திட்டத்தை முன்னாயத்தத்துடன் மேற்கொள்கின்றனரா, அதனை பூரணத்துவமாக நிறைவு செய்கின்றாரா என்பதை பகுதித் தலைவர், அதிபர், பாட ரீதியான ஆசிரிய ஆலோசகர் மேற்பார்வை செய்வது கட்டாயமாகும். ஆசிரியர்களின் கற்பித்தல் முறை வாரம், மாதம் என்ற அடிப்படையில் உள்ளக, வெளியக மேற்பார்வைகள் இடம்பெற வேண்டும்.

**பிரதான சொற்கள்:** ஆசிரியர்கள், பாடத்திட்டமிடல், சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள், அடைவுமட்டம், மண்முனை தென்மேற்கு கோட்டம்

## 1.1 ஆய்வின் அறிமுகம்

எந்தவொரு செயற்பாடும் திட்டமிடலுடன் இடம்பெறும் போதுதான் எதிர்பார்த்த இலக்கினை அடையக் கூடியதாக காணப்படும். ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலுடன் கற்பித்தலில் ஈடுபடும் போது ஆசிரியர் கற்பிக்க வேண்டிய பரப்புக்களையும் மாணவர் கற்க வேண்டிய பரப்புக்களையும் இனங்காணக் கூடியதாக காணப்படும். ஆனால் ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலுடன் கற்பித்தலில் ஈடுபடுவது குறைவாகக் காணப்படுகின்றது. இதற்கு காரணங்களாக பாட நூல், கைந்நூல் என்பவை உரிய நேரத்திற்கு கிடைப்பதில்லை, ஆசிரியர்கள் பாடரீதியான நிபுணத்துவமின்றி காணப்படல், கற்பிப்பதற்கு தேவையான வளங்கள் போதுமானதாக காணப்படுவதில்லை, நேரம் போதாமை, தூரப் பிரதேசம் போன்றனவாகும்.

இவ்வாறான காரணங்களினால் ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலின்றி கற்பித்தலில் ஈடுபடுவதனால் சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் கற்றலில் ஆர்வமின்றி செயற்பட்டு அடைவுமட்டமானது வீழ்ச்சி நிலையில்

To whom correspondence should be addressed: tharshanathevarajan@gamil.com

[141] Assistant Lecturer, Department of Education and Child Care, Eastern University, Sri Lanka.

காணப்படுகன்றது. எனவே மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்க வேண்டுமெனில் ஆசிரியர்கள் பாட முன்னாயத்தத்துடன் வகுப்பறைக்கு செல்லுதல் வேண்டும். இதற்கு பாட நூல்கள், கைந்நூல், கற்பித்தல் உபகரணங்கள் என்பன உரிய நேரத்திற்கு அதிகாரிகளினால் வழங்கப்பட வேண்டுமென்பதை எடுத்துக் கூறுவதற்கான ஆலோசனை வழிகாட்டல்களை வழங்குவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**1.2 ஆய்வுப் பின்னணி**

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் அடைவுமட்டமானது வீழ்ச்சி நிலையிலே காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணமாக ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலின்றி கற்பித்தலில் ஈடுபடுவதாகும். ஆசிரியர்களுடைய வகிபாகம் நிலைமாற்று வகிபாகமாக காணப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் ஆசிரியர் பழமையிலிருந்து மாற்றம் பெறாமல் பாடப் புத்தகங்களை ஒப்புவிப்பவர்களாகவே காணப்படுகிறார். ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலின்றி புத்தகங்களை வாசிப்பவர்களாக காணப்படுவதனால் மாணவர்களுடைய அடைவுமட்டமானது வீழ்ச்சி நிலையிலே காணப்படுகின்றது.

ஆசிரியர்கள் வாண்மை விருத்தியற்றவர்களாகவும் பாடரீதியான நிபுணத்துவம் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் பாடத்திட்டமிடலின்றி வகுப்பறையில் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். இதனால் மாணவர்களின் அடைவுமட்டமானது வீழ்ச்சியடைந்து செல்கின்றது என்பது ஆய்வின் பின்னணியாக உள்ளது.

**1.3 ஆய்விற்கான நியாயம்**

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தில் மாணவர்களின் அடைவுமட்டம் வீழ்ச்சியடைந்த நிலையிலே காணப்படுகின்றது. இதற்கு ஆசிரியர்களின் கற்பித்தல் முறையே காரணமாகும். அதாவது மாணவர்கள் பாடத்தில் கவனம் செலுத்தாமைக்கான காரணங்களாக ஆசிரியர்கள் வகுப்பறையில் வினைத்திறனாக செயற்படாமை, பாடத்திட்டமிடலுடன் வகுப்பறைக்கு செல்லாமை போன்றவற்றை குறிப்பிட முடியும். இவ்வாறான விடயங்களை எடுத்துக் கூற இவ்வாய்வு நியாயமுடையதாக உள்ளது.

மேலும் ஆசிரியர்களின் பாட அனுபவங்களை இனங்காணவும் எவ்வாறான பாடத்திட்டமிடல்களை மேற்கொள்கின்றனர் என்பதை அறியவும் பாடத்திட்டமிடலை மேற்கொள்ளாமைக்கான காரணங்களை கண்டறியவும் ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் அதற்கு எத்தகைய நடவடிக்கைகளை கல்வித் திணைக்களங்கள் மேற்கொள்ள வேண்டுமென்பதை எடுத்துக் கூற இவ்வாய்வு நியாயமுடையதாக உள்ளது.

**1.4 ஆய்வுப் பிரச்சினை**

மாணவர்கள் கற்றலில் ஆர்வத்துடன் செயற்பட வேண்டுமெனில் ஆசிரியர்களின் வினைத்திறனான செயற்பாடுகள் இடம்பெற வேண்டும். ஆனால் ஆய்விற்கு தெரிவு செய்த பிரதேசங்களில் ஆசிரியர்கள் வினைத்திறனான கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுவடுவதில்லை. எடுத்துக்காட்டாக வகுப்பறைக்கு பாடத்திட்டமிடலுடன் ஆசிரியர் செல்வதில்லை.

ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலின்றி வகுப்பறைக்கு செல்வதினால் மாணவர்கள் பாடத்தை விரும்பி கற்பதில்லை. இதனால் மாணவர்களுடைய அடைவுமட்டமானது வீழ்ச்சியடைகின்றது. இவ்வாறு ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலின்றி செல்வதற்கு முக்கிய காரணங்களாக பாடரீதியான அனுபவமின்மை, பயிற்சியின்மை, நகர்ப் பிரதேசங்களிலிருந்து கஷ்டப் பிரதேசங்களிற்கு பாடசாலைக்கு ஆசிரியர்கள் வருகை தருவதனால் உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு சமூகமளிக்க முடியாமை போன்றவற்றை குறிப்பிடமுடியும். இத்தகைய பிரச்சினைகளை மையமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

**1.5 ஆய்வின் பொது நோக்கமும் விசேட நோக்கமும்**

**1.5.1 பொது நோக்கம்**

ஆசிரியர்களின் பாடத்திட்டமிடலின்மைக்கும் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் அடைவுமட்டத்திற்கும் இடையிலான தொடர்பை அறிதல்.

**1.5.2 விசேட நோக்கம்**

1. ஆசிரியர்களின் பாட அனுபவங்களை இனங்காணல்.
2. ஆசிரியர்களின் பாடத்திட்டமிடல்களை கண்டறிதல்.
3. மாணவர்களின் அடைவுமட்ட வீழ்ச்சிக்கான காரணங்களை பகுப்பாய்வு செய்தல்.
4. ஆசிரியர்கள் பாடத்திட்டமிடல்களை மேற்கொள்வதற்கான ஆலோசனை வழிகாட்டல்களை முன்வைத்தல்.

**2.0 இலக்கிய மீளாய்வு**

ஆசிரியர் எவ்வளவு தான் அறிவாளியாக இருந்தாலும், தான் கற்பிக்கும் விடயத்தை கவனமெடுத்து ஆயத்தஞ் செய்யாவிடின் அவர் வெற்றியுடன் கற்பிக்க முடியாது. ஒழுங்கான முறையில் பாடத்தை அலகுகளாக்கி அவற்றை மாணவர்களின் முன்னறிவுடன் எவ்வாறு பொருத்திக் கற்பிக்கலாம் என்று ஆசிரியர் முன்கூட்டியே சிந்தித்து பாடக்குறிப்புக்களை தயாரிக்க வேண்டும். மாணவர்களின் முன்னறிவு, பாடத்தின் கால அளவு, தகவல்கள், அமைப்பு, தொடர்ச்சி ஆகியவற்றை மனதில் வைத்து ஆயத்தம் செய்தல் வேண்டும். மாணவர்கள் பல விதமான குடும்ப அழுத்தங்கள், சமூக அழுத்தங்கள், சகபாடிகள் அழுத்தங்களோடு பாடசாலைக்கு வருகின்றனர். இத்தகையோரை அறிந்து கவனிக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியருடையது. மாணவர்களை மதித்து அவர்களது தேவைகளை உணர்ந்து அபிப்பிராயங்களைச் செவிமடுத்து உதவுபவர்களே சிறந்த ஆசிரியர்கள். பாடசாலைக்கு மாணவர்கள் எல்லோரும் வெற்றியடைவார்கள் என்ற சாதகமான மனப்பான்மையுடனும் ஆசிரியர்கள் செயற்படும் போது எதிர்பார்ப்புக்கள் வெற்றி தரும். (கருணாநிதி, 2008)

John Laughran (1999) என்பவர் தனது ஆய்வில் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் ஆசிரியரின் மனப்பாங்கு, ஆசிரியரின் கற்பித்தல் பாணி, ஆசிரியரின் பாடப்புலமை, தொழில் வாண்மை விருத்தி, அனுபவம் போன்றவற்றை குறிப்பிடுகின்றார்.

**3.0 ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்**

இவ் ஆய்வு முறையியலினுள் ஆய்வின் பொது நோக்கம், விசேட நோக்கம் என்பன இனங்காணப்பட்டு ஆய்விற்கான பிரதேசம், ஆய்வின் சனத்தொகை பற்றிய விளக்கங்கள் பெறப்பட்டு அதன் பின்னர் மாதிரித் தெரிவு எவ்வாறு இடம்பெறுகின்றது என்பது பற்றியும், தகவல்களைப் பெறுவதற்கு எத்தகைய ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்படும் அதன் நம்பகம், தகுதி எவ்வாறு காணப்படும், தரவுப் பகுப்பாய்வினை எவ்வாறு மேற்கொள்ள முடியும் எனும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

ஆசிரியர்களின் பாடத்திட்டமிடலானது சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் அடைவு மட்டத்தில் ஏற்படுத்தும் தாக்கம் எனும் ஆய்வுத் தலைப்பானது மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்வதற்கு அளவை முறை ஆய்வு பின்பற்றப்படுகின்றது. இதன் அடிப்படையில் இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், ஆவணங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் வினாக்கொத்தின் மூலமாகவும் அதிபரிடமிருந்து நேர்காணலின் மூலமாகவும் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்விற்கு உட்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**3.1 மாதிரித் தெரிவு**

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட மண்முனை தென்மேற்கு கோட்டத்தில் 21 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றுள் 04 பாடசாலைகள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட 04 பாடசாலைகளிலிருந்தும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆய்வு நோக்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இலகு எழுமாற்று மாதிரியைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதிபர்கள் எவ்வித மாதிரி தெரிவுமின்றி நேரடியாக நான்கு பாடசாலையின் 04 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சிரேஷ்ட இடைநிலைப்பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களுள் ஒரு பாடசாலைக்கு 9 ஆசிரியர்கள் என்ற அடிப்படையில் 36 ஆசிரியர்கள் இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சிரேஷ்ட இடைநிலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களில் ஒரு பாடசாலையிலிருந்து 10 மாணவர்கள் என்ற அடிப்படையில் 40 மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 3.1 தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்


வினாக்கொத்திலுள்ள வினாக்களுக்கான தரவுகள் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் இவ் ஆய்வின் பகுப்பாய்வு முறையானது முன்னம் பின்னமாக பல செயற்பாடுகளைக் கொண்டமைந்துள்ளது. தரவு வடிவங்களைத் தெரிவு செய்து தரவுகளைச் சேகரித்ததன் பின்னர் அத் தரவுகள் பகுப்பாக்கம் செய்யப்பட்டு குறித்துக் காட்டப்பட்டுள்ளது. தரவுப் பகுப்பாய்வானது விசேட நோக்கத்திற்கு ஏற்ப ஆய்வு வினாக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளின் மூலம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டமைகின்றது.

வினாக்கொத்தின் ஊடாக மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும், அதிபர்களிடமும் பெறப்பட்ட தரவுகள் எண்சார் தகவல்களாக மாற்றப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணையாக்கம், முப்பரிமான வரிபடம், சலாகை வரைபுகள் ஊடாக புள்ளிவிபரங்களின் வாயிலாக விளக்கப்படுகின்றது. பகுப்பாய்வுக்காக MicroSoft Excel 7 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 4.0 தரவுப்பகுப்பாய்வு முடிவுகள்

### 4.1 ஆசிரியர்களின் பாட அனுபவங்கள்


ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.




**உரு 4.1 தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள்**


ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தை அதிகரிப்பதற்காக பயிற்சிப்பட்டறைகள், வாண்மைத்துவ செயலமர்வுகள், கருத்தரங்குகள் என்பன இடம்பெறுவதாக அதிபர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தை அதிகரிப்பதற்கான பயிற்சிகள் ஓரளவு இடம்பெறுகின்றது. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.




**உரு 4.2 ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தை அதிகரிப்பதற்கான பயிற்சிகள்**

பாடத்துடன் தொடர்புடைய புதிய விடயங்களை ஆசிரியர்கள் கற்பிப்பதில்லை. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.





**உரு 4.3 பாடத்துடன் தொடர்புடைய புதிய விடயங்கள்**

ஆசிரியர்கள் பாடத்துடன் தொடர்புடைய புதிய விடயங்களை கற்பிற்காமைக்கான காரணங்களை அதிபர்களிடம் கேட்டறிந்த போது குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சியற்றவர்களாக காணப்படுகின்றமை, தேடலுக்கான வளங்கள் பாடசாலையிலின்மை, குறிப்பிட்ட பாடத்தில் காணப்படுகின்ற விடயங்களை மாணவர்களால் கற்பது கடினமாக காணப்படுகின்றது, குறிப்பிட்ட பாடத்தினை கற்பிப்பதற்கான நேரம் போதாமை போன்ற முடிவுகள் பெறப்பட்டன.


**4.2 ஆசிரியர்களின் பாடத்திட்டமிடல்**

ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலுடன் வகுப்பறைக்கு சமூகமளிப்பது திருப்தி அளிப்பதாக காணப்படவில்லை. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.





**உரு 4.4 ஆசிரியர்கள் பாட முன்னாயத்துடன் வகுப்பறைக்கு சமூகமளித்தல்**

அனைத்து ஆசிரியர்களும் பாட வேலைத்திட்டங்களை தயாரிக்கின்றனர். இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.





**உரு 4.5 ஆசிரியர்கள் பாட வேலைத்திட்டங்களை தயாரித்தல்**

அனைத்து ஆசிரியர்களும் செயற்பாட்டுத்திட்டங்களை தயாரிக்கின்றனர். இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.




**உரு 4.6 ஆசிரியர்கள் செயற்பாட்டுத்திட்டங்களை தயாரித்தல்**


ஆசிரியர்கள் தயாரிக்கும் பாட வேலைத்திட்டங்கள், செயற்பாட்டுத்திட்டங்கள் என்பனவற்றை அதிபர்கள் மேற்பார்வை செய்கின்றனர். இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.




**உரு 4.7 ஆசிரியர்கள் தயாரிக்கும் பாட வேலைத்திட்டங்கள், செயற்பாட்டுத்திட்டங்கள் என்பனவற்றை அதிபர்கள் மேற்பார்வை செய்தல்**


ஆசிரியர்கள் தயாரிக்கும் பாடத்திட்டங்களில் வேறுபாடு காணப்படுகின்றதா எனக் கேட்ட போது ஒவ்வொரு வருடமும் அதே செயற்பாட்டுத் திட்டங்களையே தயாரிக்கின்றனர். திகதியில் மாத்திரம் மாறுதல் காணப்படுகின்றதே ஒழிய விடயம் ஒன்றாகவே காணப்படுகின்றது.

தயாரிக்கப்படும் செயற்பாட்டுத் திட்டங்களுக்கேற்ற வகையில் கற்பித்தலை மேற்கொள்வதில்லை. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.





**உரு 4.8 செயற்பாட்டுத் திட்டங்களுக்கேற்ற வகையில் கற்பித்தலை மேற்கொள்ளுதல்**

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டிய விடயங்களை ஒவ்வொரு நாளும் தயார்ப்படுத்துவதில்லை. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.





**உரு 4.9 ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டிய விடயங்களை ஒவ்வொரு நாளும் தயார்ப்படுத்தல்**

பாட முன்னாயத்தங்களை மேற்கொள்ளும் போது ஒவ்வொரு மாணவர்களையும் கவனத்தில் கொண்டு தயாரிப்பதில்லை. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.




**உரு 4.10 பாட முன்னாயத்தங்களை மேற்கொள்ளும் போது ஒவ்வொரு மாணவர்களையும் கவனத்தில் கொண்டு தயாரித்தல்**

அதிபர்கள், ஆசிரியர்களை மேற்பார்வை செய்வது திருப்தி அளிக்கக் கூடிய வகையில் காணப்படவில்லை. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.




**உரு 4.11 அதிபர்கள், ஆசிரியர்களை மேற்பார்வை செய்தல்**

ஆசிரியர்களின் பாட முன்னாயத்தமின்மைக்கான காரணங்களாக வீட்டிலிருந்து பாடசாலை அதிக தூரத்தில் காணப்படல், பாடசாலைக்கு நேரத்திற்கு செல்வதற்கான வாகன வசதிகள் இன்மை, பாடரீதியான நிபுணத்துவமின்மை, பாடசாலையில் வளங்கள் போதமை, நவீன கற்பித்தல் துணைச் சாதனங்களை பயன்படுத்த தெரியாமை, வகுப்பறைச் சூழல் கற்பித்தலை மேற்கொள்வதற்கேற்ற வகையில் காணப்படாமை போன்ற முடிவுகள் பெறப்பட்டன.


**4.3 மாணவர்களின் அடைவுமட்ட வீழ்ச்சிக்கான காரணங்களை காரணங்கள்**

தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கற்பிக்காத பாடங்களில் மாணவர்களின் அடைவுமட்டம் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் காணப்படவில்லை. இதனை பின்வருமாறு கணித பாடத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் நோக்கக் கூடியதாக உள்ளது.

| **பாடசாலை** | **பரீட்சை ஆண்டுகள்** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2015** | **2014** | **2013** | **2012** | **2011** |
| மட்/ மாவடிமுன்மாரி அ.த.க பாடசாலை | 42 % | 37.5 % | 8.33 % | 64 % | 83.33 % |
| மட்/ நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலயம் | 45.45 % | 0% | 100 % | 54.54 % | 33.3 % |
| மட்/ கடுக்காமுனை வாணி வித்தியாலயம் | 36.84% | 50% | 33.33% | 6.6% | 36% |
| மட்/ கொல்லநுலை விவேகானந்தா வித்தியாலயம் | 37.5% | 33.3 % | 66.60% | 66.66% | 90% |


**அட்டவணை 4.1 கணித பாட க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்**

ஆசிரியர்களின் கற்பித்தல் முறை திருப்தியளிக்கக் கூடிய வகையில் காணப்படாமை. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.





**உரு 4.12 ஆசிரியர்களின் கற்பித்தல் முறை**

ஆசிரியர்கள் பாடப்பரப்பை பூர்த்தி செய்வது திருப்தி அளிக்கக் கூடிய வகையில் காணணப்படவில்லை. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.




**உரு 4.13 ஆசிரியர்கள் பாடப்பரப்பை பூர்த்தி செய்தல்**

ஆசிரியர்கள் மேலதிக பயிற்சி- வீட்டு வேலைகள் என்பன ஓரளவு வழங்குகின்றனர். இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.




**உரு 4.14 ஆசிரியர்கள் மேலதிக பயிற்சி- வீட்டு வேலைகள் என்பனவற்றை வழங்கல்**

மாணவர்களின் அடைவுமட்ட வீழ்ச்சிக்கான காரணங்களை அதிபர்களிடம் கேட்டறிந்த போது ஆசிரியிர்களின் பாட முன்னாயத்தமின்மை, மாணவர்களை ஆசிரியர்கள் ஊக்கப்படுத்தாமை, கணிப்பீடு, மதிப்பீடு உரிய நேரத்திற்கு இடம்பெறாமை, மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக சமுகமளிக்காமை, பாடத்தில் ஆர்வமின்மை, சுய கற்றலில் ஈடுபடாமை, மேற்பார்வைகள் இடம்பெறாமை என்பன குறிப்பிடப்பட்டன.

### 4.5 ஆசிரியர்கள் பாட முன்னாயத்தத்தை மேற்கொள்வதற்கான ஆலோசனை வழிகாட்டல்கள்

ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலை மேற்கொள்வதற்கு பாட ரீதியான நிபுணத்துவம் வழங்கப்பட வேண்டும், நவீன கற்பித்தல் முறைகள், கற்பித்தல் உபகரணங்களை பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் என்பன முழுமையாக கற்பிக்க வேண்டும், உள்ளக, வெளியக மேற்பார்வை இடம்பெற வேண்டும், ஆசிரியர்கள் பாடசாலைக்கு நேரத்திற்கு சமூகம் தருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும், ஆசிரியர்களின் மனநிலைகளில் மாற்றமேற்பட வேண்டும் போன்ற முடிவுகள் பெறப்பட்டன.

### 5.0 தீர்வுகளும், ஆலோசனைகளும்

### 5.1 ஆசிரியர்களின் பாட அனுபவங்கள்

ஆசிரியர்களை நியமனம் செய்யும் போது குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு போதுமான வாண்மைத்துவ பயிற்சி வழங்குதல் வேண்டும். குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தை அதிகரிப்பதற்கான பயிற்சிப் பட்டறைகள் வலயக் கல்வி அலுவலங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும். மாணவர்களுக்கு புதிய விடயங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் புதிய விடயங்களை தேடுவதற்கான ஊக்கங்களை அதிபர்கள் வழங்க வேண்டும். பாடசாலையில் ஆசிரியர்கள் தேடலை மேற்கொள்ளக் கூடிய வகையில் இணைய வசதிகளை கல்வித் திணைக்களங்கள் பாடசாலைக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

### 5.2 ஆசிரியர்களின் பாடத்திட்டமிடல்கள்

ஆசிரியர்கள் பாட முன்னாயத்தத்துடன் வகுப்பறைக்கு செல்ல வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களின் பாட வேலைத்திட்டங்கள், செயற்பாட்டுத்திட்டங்கள் என்பவற்றை அதிபர்கள் கட்டாயம் மேற்பார்வை செய்வதோடு செயற்பாட்டுத் திட்டங்கள் காலத்தின் தேவைக்கேற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளதா என்பதை நோக்க வேண்டும். ஆசிரியர்கள் தயாரிக்கும் செயற்பாட்டுத் திட்டங்களுக்கேற்ற வகையில் கற்பித்தலை மேற்கொள்கின்றனரா என்பதை அதிபர் மேற்பார்வை செய்ய வேண்டும். ஆசிரியர் பாட முன்னாயத்தங்களை மேற்கொள்ளும்போது ஒவ்வொரு மாணவர்களையும் கருத்தில் கொண்டு தயாரிக்க வேண்டுமென்பதை அதிபர் வலியுறுத்த வேண்டும்.

ஆசிரியர்கள் பாட முன்னாயத்தங்களை மேற்கொள்ளும் வகையில் அவர்கள் நேரத்திற்கு பாடசாலைக்கு செல்வதற்கு அரசாங்கம் வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்களிற்கு நவீன கற்பித்தல் சாதனங்கள், கற்பித்தல் முறைகள் என்பவற்றை பயன்படுத்துவதற்கான செயலமர்வுகளை கல்வித் திணைக்களங்கள் மேற்கொள்ள வேண்டும்.

### 5.3 மாணவர்களின் அடைவுமட்ட வீழ்ச்சிக்கான காரணங்கள்

பாட ரீதியில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்களுக்கு அத்துறை சார்ந்த வளவாளர்களைக் கொண்டு கருத்தரங்குகளை நடாத்துதல், கல்வியமைச்சு உள்வாரி, வெளிவாரியான பரிசோதனை வழிகாட்டல்களை பாடசாலை ரீதியாக நடாத்த வேண்டும். ஆசிரியர் குறிப்பிட்ட தவணைக்குரிய பாடத்திட்டத்தை முன்னாயத்துடன் மேற்கொள்கின்றாரார்களா அதனை முழுமையாக நிறைவு செய்கின்றாரா என்பதை பகுதித் தலைவர், அதிபர், பாட ரீதியான ஆசிரிய ஆலோசகர் மேற்பார்வை செய்வது கட்டாயமாகும்.

### 4.5 ஆசிரியர்கள் பாட முன்னாயத்தத்தை மேற்கொள்வதற்கான ஆலோசனை வழிகாட்டல்கள்

ஆசிரியர்களின் கற்பித்தல் முறை வாரம், மாதம் என்ற அடிப்படையில் உள்ளக, வெளியக மேற்பார்வைகள் இடம்பெற வேண்டும். ஆசிரியாகள் முன்னாயத்தங்களை மேற்கொள்வதற்கேற்ற வகையில் வளங்களை உரிய அதிகாரிகள் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

### உசாத்துணை நூல்கள்


1. அருள்மொழி.செ, 2008, கல்வி ஆய்வு முறைகள், எவகிறின் பதிப்பகம்.
2. இராஜேஸ்வரன்.ப, ப.தனபாலன், 2005, தேசிய அபிவிருத்தியில் தமிழர் கல்வி, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்.
3. கணபதி.க, 1993, கல்வி வசன் மனவியல் துணைவன், துண்ணவன் சந்தா பப்ளிஷர்ஸ்.
4. கருணாநிதி.மா, 2008, கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம்.
5. கமலநாதன்.தி, 2009, கல்வியியற் பதிவுகளும் பண்புசார் விருத்தியும், சேமமடு பதிப்பகம்
6. சந்திரசேகரன்.சோ, 1995, புதிய நூற்றாண்டுக்கான கல்வி, தர்ஷனா பிரசுரம்.
7. சந்திரசேகரம்.சோ, 2002, இலங்கையில் தமிழர் கல்வி வளர்ச்சியும் பிரச்சினைகளும், கொழும்பு தமிழ் சங்கம்.
8. சந்திரசேகரம்.சோ, 2004, கல்வி ஒரு பன்முகநோக்கு, உமா பதிப்பகம்.

9. சந்திரசேகரம்.சோ, 2008, சமகாலக் கல்விமுறைகளின் சில பரிமாணங்கள், சேமமடுபதிப்பகம்.
10. சந்திசேகரம்.சோ, 2011, கல்வியில் புதிய தடங்கள், சேமமடுபதிப்பகம்.
11. சத்தார்.எம்.பிர்தௌஸ், 2009, நிலைமாற்று முகவர், நியூ செலக்ஷன், அக்கரைப்பற்று.
12. சின்னத்தம்பி.க, 2007, கல்விஆய்வியல், ஜெயா இன்டநெசனல்.
13. சின்னத்தம்பி.மா, 2005, இலங்கையின் கல்விச் செலவு, ரெக்னோ பிறிண்ட், கொழும்பு
14. சின்னத்தம்பி.மா, 2008, பாடசாலையும் சமூகமும், குமரன் புத்தக இல்லம்.
15. சின்னத்தம்பி.மா, 2009, பாடசாலைகளை முகாமை செய்தல் சமகால அணுகுமுறை, சேமமடு பொத்தகசாலை, கொழும்பு-11.
16. சிவநடேஸ்.செ, 2006, பாடசாலைஅபிவிருத்தி, கல்விச் சங்கம், கிழக்குப் பல்கலைக்கழகம்.
17. சுமதி.ம, 2012, சமூகமயமாக்கல் குடும்பம் மற்றும் பாடசாலையின் பங்கு, சஞ்யு வெளியீட்டகம்.
18. சுமதி.ம, 2012, கல்வியியல் கட்டுரைகள், சஞ்யு வெளியீட்டகம்.
19. செல்வராஜா.மா, 1997, கல்விக் கொள்கைகளும் முகாமைத்துவமும், ஏ.ஜே.பிறின்டர்ஸ்.
20. செல்வராஜா.மா, 2005, கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள், எவகிறீன் பிறிண்டர்ஸ்.
21. தனபாலன்.பா, 2005, கல்வியியலாளன், ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்.
22. தனபாலன்.பா, 2008, நவீனகற்றல் கற்பித்தல் முறையியல்கள், குமரன் புத்தக இல்லம், வடபழனி சென்னை– 600 026.
23. நவரட்ணம்.உ, 2007, கற்றல் கற்பித்தல் செயல்முறையில் கல்வி உளவியல், குமரன் புத்தக இல்லம்.
24. பிரதீபா, 2005, இன்றைய கல்வியில் எதிர் கொள்ளும் சவால்கள், சாரதா பதிப்பகம்.
25. புண்ணியமூர்த்தி.கி, 2014, ''பாடசாலை முகாமைத்துவம் கோட்பாடுகளும் பிரயோகங்களும்'', சேமமடுபதிப்பகம்.
26. முத்துலிங்கம்.ச, 1980, கல்வி உளவியல், ஆசிர்வாதம் பிறஸ், யாழ்ப்பாணம்.
27. ஜெயராசா.சபா, 2000, ஆய்வு முறையியல், கல்வி ஆய்வுக் கழகம்.
28. ஜெரேப்ரோ.பி, 2007, பெற்றோரும் கல்வியும், குமரன் புத்தக இல்லம்.